## செய்தி வெளியீடு – 2.2.2011

## ஆறாவது கட்டமாக 10 இலட்சம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்திட

## முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் திறப்பு!

தமிழக அரசின் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை ஐந்து கட்டங்களில் மொத்தம் 1 கோடியே 62 இலட்சத்து 80 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிட அனுமதிக்கப்பட்டு, 1 கோடியே 58 இலட்சத்து 82 ஆயிரத்து 186 குடும்பங்களுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன; தொடர்ந்து வழங்கப்படுகின்றன.

இந்நிலையில், 9.1.2011 அன்று நடைபெற்ற சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் 21–வது கூட்டத்தில் ஆறாவது கட்டமாக கூடுதலாக 10 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதென முடிவெடுக்கப்பட்டது. அதற்கேற்ப சர்வதேச ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, 13.1.2011 அன்று நாளேடுகளில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டன.

இதற்கான ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களை சிங்கப்பூரை சேர்ந்த ஒரு நிறுவனம், சீனாவை சேர்ந்த ஒரு நிறுவனம் மற்றும் இந்தியாவை சேர்ந்த 28 நிறுவனங்கள் ஆக மொத்தம் 30 நிறுவனங்கள் இணைய தளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொண்டன அவற்றில் 11 நிறுவனங்களின் நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிப் படிவங்கள்,

ஏற்கனவே அறிவித்தபடி இன்று (2.2.2011) மாலை 3.00 மணி வரையில் தமிழ் நாடு மின்னணு நிறுவனத்தில் பெறப்பட்டன. அவ்வாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் அடங்கிய பெட்டி மூடி முத்திரையிடப்பட்டு, மாதிரி தொலைக்காட்சிப் பெட்டிகளுடன் தலைமைச் செயலகத்திற்கு உடனடியாகக் கொண்டு வரப்பட்டன.

இவ்வொப்பந்தப்புள்ளிகள், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில், இத்திட்டத்திற்காக உருவாக்கப்பட்டுள்ள சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு உறுப்பினர்களான மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் (திமுக), சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. ஜி. கே. மணி, (பா.ம.க), சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி டி. யசோதா (காங்கிரஸ்), திரு. சி. கோவிந்தசாமி, சட்டமன்றக் கட்சித் தலைவர் பூவை திரு. மு. ஜெகன் மூர்த்தி (புரட்சி பாரதம்) மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. அப்துல் பாஸித் (இந்திய யூனியன் முஸ்லிம் லீக்), திரு. து. ரவிகுமார் (விடுதலைச் சிறுத்தைகள்) மற்றும் ஒப்பந்ததாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் இன்று (2.2.2011) மாலை 4.30 மணிக்கு திறந்து ஆய்வு செய்யப்பட்டன. அவ்வமயம் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர் (திருமதி) பூங்கோதை, தலைமைச் செயலாளர் திருமதி எஸ்.மாலதி, இ.ஆ.ப, நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப, தகவல் தொழில்நுட்பவியல் துறை முதன்மைச் செயலாளர் திரு.பி.டபிள்யு.சி. டேவிதார், இ.ஆ.ப, எல்காட் நிறுவன மேலாண்மை இயக்குநர் டாக்டர் சந்தோஷ்பாபு, இ.ஆ.ப, உள்ளிட்ட அதிகாரிகள் உடனிருந்தனர்.

இவ்வொப்பந்தப்புள்ளி திறப்பில் பிகஸ்டோ, சன்டெக் விஷன் லிமிடெட், பெல்டெக் (இந்தியா) லிமிடெட், கெவின் இன்போடெக்

பிரைவேட் லிமிடெட், வீடியோகான் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட், ஏர்விஷன் இந்தியா பிரைவேட் லிமிடெட், டிக்சன் டெக்னாலஜீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், ஈஸ்ட் இந்தியா டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட், மல்கோத்ரா எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட், ஜீனஸ் எலக்ட்ரோடெக் லிமிடெட், எல்.பி.எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் ஆகிய 11 நிறுவனங்கள் கலந்து கொண்டன.

இந்நிறுவனங்கள் அனைத்தும் தொழில்நுட்பக் குழுவால் தகுதிபெற்ற நிறுவனங்களாக பரிந்துரைக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்த 11 நிறுவனங்களின் விலைப்புள்ளி உறைகள் (Price Bid) மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் தலைமையிலான சட்டமன்ற கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் முன்பு திறக்கப்பட்டு, ஒவ்வொரு நிறுவனமும் அளித்திருந்த விலைப்புள்ளிகள் விரிவாக பரிசீலனை செய்யப்பட்டது. அதன் முடிவில் சன்டெக் விஷன் லிமிடெட் நிறுவனம் ஒரு தொலைக்காட்சிப் பெட்டிக்கு குறிப்பிட்டிருந்த 2,497 ரூபாய் விலையே குறைந்த விலைப்புள்ளியாக தேர்வு குழுவினால் ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

குறைந்த விலைப்புள்ளி அளித்த சன்டெக் விஷன் லிமிடெட் நிறுவனம் குறிப்பிட்டிருந்த விலையில் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கிட, ஒப்பந்தப்புள்ளிகள் அளித்திருந்த மற்ற 10 நிறுவனங்களும் ஒப்புதல் அளித்தன. இதனடிப்படையில், 10 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளை கொள்முதல் செய்வதற்கான ஆணைகள் இந்நிறுவனங்களுக்கு விரைவில் பிறப்பிக்கப்படவுள்ளன.

*****



*வெளியீடு, இயக்குநர்,*
*செய்தி, மக்கள் தொடர்புத் துறை,*
*சென்னை-9*